# MASTER NEGATIVE NUMBER

6016.16

---

# போர்வாள்

வாள் 2, வீச்சு 43

June 25, 1949


Record no. 2368

*Pōrvāḷ*


*Vāḷ 2, vīccu 43*

*June 25, 1949*

Record no. 2368








ஆழ்வார்கள், அவதார புருஷர்கள், நாயன்மார்கள், நபிகள், தேவகுமாரர்கள் என்பவர்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றால் அயோக்கியர்கள், பொய்யர்கள், திருடர்கள், கொலைகாரர்கள், நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள், வன்னெஞ்சர்கள், சோம்பேரிகள், ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பவர்கள், மூடர்கள் என்பவர்கள் யாரால் அனுப்பப்பட்டவர்கள்?

—பெரியார்.

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 11
25—6—49 சனிக்கிழமை

வீச்சு 43






"வங்காளத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றுவிட்டது உண்மைதான். என்றும் அந்தத் தோல்வியைக்கொண்டே, காங்கிரஸ், மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று கூறிவிட முடியாது!"

—பண்டித நேரு.

**இன்பத் தமிழ் இருக்க இந்திச் சிறுமொழி நமக்கேதற்கு ?**

# "போர்வாள்" மீது மலாய் சர்க்கார் பாணம்!

## மாவீரன் கணபதியைப் போற்றியது குற்றமாம்!

### விசித்திரமான சர்க்காரின் விபரீதமான போக்கு!

நம் "போர்வாள்" பத்திரிகையின் 14-5-49 இதழ் மலாய் நாட்டில் விற்கப் படக் கூடாது என்று அந்த நாட்டு சர்க் கார் கெடுபிடி உத்தரவு பிறப்பித்திருக் கிறார்கள்.

அந்த இதழில் வெளியாகியுள்ள "மரணத்தின் அழைப்பு—மறுபடியும்!" என்ற தலையங்கத்தில், பாட் டாளிகளின் தலைவன்—இளந்தமிழ்ச் சிங்க ஏறு—மாவீரன் கணபதிக்கு அநியாயமான முறையில் மலாய் சர்க்காரால் விதிக்கப்பட்ட அக்கிரமமான தூக்குத் தண்டனையைக் கண்டித்தும், மற்றொரு நிரபராதித் தமிழனை சாம்பசிவத்திற்கு அதே ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டிருக்கும் தூக்குத் தண்டனையை எப்படியாவது நிறுத்தி சாம்பசிவத் தைக் காப்பாற்றுவதே தூக்கு மேடையில் ஏற்றப் பட்ட கணபதிக்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு என்று வலியுறுத்தியும் நாம் எழுதி இருப்பதே மலாய் சர்க்காரின் இந்த விசித்திர உத்தரவுக்குக் காரணம் என்று தெரிகிறது.

பூனையோ துடுக்கு ஆனால் அதை அடிப்பதோ பாவம் என்பார்களே அதுபோல இருக்கிறது மலாய் சர்க்காரின் போக்கு! அவர்கள் செய்திருப்பதோ மன்னிக்கமுடியாத குற்றம்! இப்படிச் செய்திருக்கிறீர்களே ஈவு இரக்கமின்றி, இது நியாயமா என்று கேட்டுவிட்டாலோ அவர்களுக்கு வருவது அளவுகடந்த கோபம்! விசித்திரமான சர்க்கார்! விபரீதமான போக்கு!!

---

வருந்துவதும், மன்னிப்புக் கோரு வதும் எதற்கு? சுத்தப் பைத்தியம்! என்று மிகுந்த பரிவுடன் அவன் கண்களில் வழிந்த நீரைத் தன் முந்தானையால் துடைத்து அவ ளைத் தேற்றினாள் கமலம்.

விசாலம் மெய்மறந்து போய் அசைவற்று நின்று விட்டாள். கமலத்தின் அன்பும், கருணையும், அவள் நெஞ்சை யுருக்கி விட்டன. சட்டென்று அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு "கமலம்! நீயே என் தெய்வம்! நீயே என் உலகம்!" என்று மிகுந்த கனிவுடன் கூறினாள்.

தன்கைகளை யாரோ பற்றிமுப் பதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந் தாள் விசாலம். அதே நடுப்பகல், கடும் வெயில். அவளுடைய குழந்தைமனோகரன் தன்கைகளைப் பிடித்துக் கொண்டு "அம்மா! அப்பா வந்திருக்காரம்மா! எழுந் திரம்மா எழுந்திரம்மா" என்று தொந்தரவு செய்வதையும், எதிரே சற்று தூரத்தில் தன் கணவன் நிற்பதையும் உணர்ந்தாள் விசாலம்.

அவருக்கு எங்கிருந்துதான் அத் தைரியமும் துணிச்சலும் வந்ததோ தெரியவில்லை. "கண்டபுரம் போகணுமா? அந்த அயோக்கியப் பயல் வேணுவின் உறவு இனி நமக்கு வேண்டாம். கொலை நடக் கும்!" என்று கண்களை உருட்டி விழித்த வண்ணம் இறைந்தார் சொக்கலிங்கம்.

அந்த சாய்வு நாற்காலியின் டடுத்தவண்ணமே அவள் இறப் பதாயிருந்தால் அதைவிடமகிழ்ச்சி தருவது விசாலத்திற்கு வேறெதுவு மில்லை. சாவும் கனவுதான்! ஆமாம்! இரவுக் கனவே பலிக்கா இக்காலத்திலே பகற்கனவுதா பலிக்கப்போகிறது?

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்தியற்ற பரிதாபகரமான வாழ்க்கையைப்பற்றி எனக்குத் தெரியும், அதற்காக வருந்திய மிருக்கிறேன். இன்று என் கண வரே உன் மகிழ்ச்சிக்குக் காரண மாயிருப்பதறிந்து நான் பெருமை கொள்ளுகிறேன். இதற்காக நீ





(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வதுபோலவே, கடிதங்களின் உள் ளுறைக்குத் தக்கபடி அவைகளின் புறத் தோற்றத்தையும் நம் முன் னோர்கள் மாற்றி யமைத்தார்கள் என்பது கவனிக்கத் தக்கது. மாதவி இப்போது எழுதுவது காதல் கடிதமல்லவா? அதற் கேற்றபடி, அதன் புறத் தோற்ற மும் காதலுணர்ச்சியை எழுப்பக் கூடியதா யிருப்பது அறிந்து வியக் கத்தக்கதாகும்.

இந்திரவிழாவின் முடிவில் கட லாடுதற்குக் கடற்கரைக்கு மாதவி யோடு சென்ற கோவலன் அவள் நற்பொழுக்கத்தைச் சந்தேகித்து, அவளைப் பிரிந்து தன் வீட்டுக்கு வந்துவிடுகிறான். இவனது பிரிவை ஆற்றாத மாதவி, காதல் நோயால் மிக வருந்தித் தனது முற்றாத மழ லைச் சொற்களால் பல தடவை சொல்லிச் சொல்லி ஒரு முடங்கல் தீட்டித் தன் தோழியாகிய வசந்த மாலையைக் கூப்பிட்டு, "இம்முடங் கலிலுள்ள பொருளை யெல்லாம் கோவலனுக்கு எடுத்துச் சொல்லி அவரை இங்கே கொண்டு வருவா யாக" என்று சொல்லி யனுப்பி னாள். சண்பகம், மல்லிகை, மாதவி, பச்சிலை, சாதிமல்லி, செங் கழுநீர் — ஆகிய இவைகளால் தொடுத்த மாலையின் இடையே கட்டிய முதிர்ந்த தாழம் பூவின் வெண்மையான மடல்தான் அவள் கடிதம் எழுதுவதற்கு எடுத்துக் கொண்ட காகிதமாகும். முல்லை மல ரின் அரும்பு அவளுடைய எழுது கோலா யிருந்தது. சாதிலிங்கமும் செங்குழம்பும் அகிலும் கலந்த செம்பஞ் சுக் குழம்பு, அவள் எழுதுகோல் தோய்ப்பதற்குரிய மையாயிருந்தது. "ஆருயிர்க் காதலரே, உலகத்தி லுள்ள எண்ணிறந்த உயிர்களை யெல்லாவற்றின் துணைகளோடு கூட்டி மகிழச் செய்யும் இளவே னில் (அதாவது வசந்தகாலம்) என் பவன் ஓர் இளவரசன். அவன் முறையாட்டிலேயே புத்தியுடைய வன். அவன் அனுபவம் முதிராத சிறியவனுகையால், ஒரு நெறிப் பட்டுக் காரியங்களைச் செய்யமாட் டான். அதுவன்றியும், இந்த மாலைக் காலத்தில் காதல் கோய் எழுப்புதற்கு வந்து தோன்றிய சந் திரன் பிறக்கும்போதே கோண னாக (அதாவது பிறை ரூபமாக)ப் பிறந்தவன். ஆகையால், ஒரு வீட் டிலேயே கோப தாபங்களினால் பிரிந்திருக்கும் காதலர்களையும்,

வெவ்வேறு நாடுகளில் பிரிந்திருக் கும் காதலர்களையும் தனது மலர் அம்புகளால் கொன்று அவர்கள் உயிரைப் போக்குவது அவனுக்குப் புதியதல்லவே. இதை நீர் தெரிந்து கொள்ளுங்கள்" என்பதே மாதவி எழுதிய காதல் கடிதத்தின் உள் ளுறை பொருளாகும். அதாவது கோவலன் தன்னிடம் வராவிட் டால், தான் உயிர் துறப்பது நிச்ச யம் என்பதை அவனுக்குக் குறிப் பாய் உணர்த்தினாள். இனி அக் கடித வாசகத்தையே பார்க்கலாம்:

"மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை
புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர
சாளன்,
அந்திப் போதகத்து அரும்பிடர்த்
தோன்றிய
திங்கள் செல்வனும் செவ்வியன்
அல்லன்;
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப்
படுப்பினும்
தணந்த மாக்கள் தம்துணை
மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர்
கோடல்
இறும்பூது அன்று இஃது
அறிந்தீமின்."

* * *

ஐம்பெருந் தமிழ்க் காவியங் களுள் மற்றொன்றாகிய சீவக சிந்தா மணியில், மிக்க ஆச்சரியத்தைத் தரும் சில முடங்கல்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அவைகளில் சிலவற்றை இப் போது பார்க்கலாம்:

திருத்தக்கதேவரியற்றிய சீவக சிந்தாமணி என்னும் காவியத்துக் குக் கதாநாயகனை சீவகன் குழந் தைப் பருவத்தில் சுடுகாட்டிலே ஆதரவின்றி விடப்பட்டபோது, கந்துகன் என்னும் வணிகன் அவனை எடுத்துத் தன் மகனைப் போலவே வளர்த்துவந்தான். சீவ கன் பல கலைகளையும் கற்று, நல்ல வாலிபப் பருவத்தை யெய்தினான். அப்போது, காந்தருவதத்தையென் னும் விஞ்சையர் நங்கையை யாழ்ப் போரில் வென்று அவளை மணக் கக் கருதி, அக் கருத்தைத் தன் தோழனான புத்திசேனன் மூல மாகக் கந்துகனுக்குத் தெரிவிக் கிறான். சீவகன் 64 கலைகளிலும் வல்லவனுயிருந்த போதிலும் அவ னுக்குக் கட்டியங்காரனுடைய

பகைமை உளதென்று கந்துகன் புத்திசேனனுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, நாகமாலை என்பவளால் அனுப்பப்பட்ட தூதி ஒருத்தி அரண்மனையிலிருந்து அங்கே வந்தாள். வந்தவள் தன் கூந்தலில் முடித்து வைத்திருந்த நீலமணிபோலும் குவளை மல ரொன்றை எடுத்து, கந்துகனிடம் நீட்டினாள். இதனை மயிரிலே வைத்த பூவென்று இகழாமல், நாகமாலை குறிப்பாலே ஒரு காரி யம் உண்டென்று கருதி, அப் பூவை வாங்கிக்கொண்டான்.

உண்மையிலேயே, நாகமாலை அனுப்பினது வெறும் நீலோற் பலப்பூ அல்ல. புறத்தோற்றத் துக்கு அது ஒரு பூ போல் இருந்தது. அது ஓர் இரகசியக் கடிதம். இதைக் கந்துகன் தெரிந்துகொண் டான். தான் அனுப்பும் கடிதத் தைப் பிறர் கண்டு கொள்ளாதிருக் கும் பொருட்டு, நாகமாலை இந்த சூழ்ச்சி செய்தாள்.

பழைய காலத்திலே, இரகசியக் கடிதங்கள் எழுதும் முறைகளுள் ஒன்று சீவக சிந்தாமணியில் இந்த இடத்திலே காணப்படுகின்றது. மறைமுகமாகக் கடிதங்கள் எழுத விரும்புவோர், ஒரு சலாகையின் மேல், அதாவது ஒரு கம்பியின் மேல், ஓலையை வரிசையாக நீளச் சுற்றி, அதன்மீது கடித வாசகத் தை எழுதி, பின் ஓலையைப் பிரித் தெடுத்துச் சுருள் செய்து அனுப்பு வார்கள். அதைப் பிறர் நீட்டோ லையாக வாசித்தால், எழுத்துக்கள் வெவ்வேறிடங்களில் பிரிந்து கிடக்குமாதலின், கடித வாசகத் தைப் படிக்கமுடியாது. யாருக்குக் கடிதம் எழுதப்படுகிறதோ அவர் களுக்கு அச் சலாகையையோ, அதனைப்போன்ற பிறிதொரு பொருளையோ கடிதத்தோடு அனுப் புவார்கள். அல்லது அதன் அள வினையும் வடிவினையும் தெரிவிப் பார்கள். இம்முறையில், அவர் கள் கடிதத்தை எளிதில் வாசிக்க முடியும்.

குவளைப் பூவுக்குக் காம்பு இருக்குமல்லவா? நாகமாலை அனுப்பிய குவளைப்பூவின் காம்பு தான் சலாகை என்பதைக் கந் துகன் குறிப்பாய் உணர்ந்து கொண்டு, மலரின் இதழ்களை விரித்து, அதனுள் இருக்கும் ஓலையை யெடுத்து, அதைக் காம் பின்மேல் கணக்காக வரிகள் ஏற்

(7-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை.

# பகல் கனவு

(நீலாம்பாள்)

“தினந்தோறும் இரவு வந்துவிட்டால் உனக்கு ஏதாவது ஒரு நோய் வந்துவிடுகிறது. ஆமாம், உண்மை நோயாயிருந்தால் அப்படி வராது. பொய் நோய் தானே! அது வேண்டும்போதெல்லாம் வந்துவிடுகிறது. உன்னைச்சொல்லி என்ன பயன்? நீ நிரம்பப்படித்தவள், மகா புத்திசாலி! நான் மடையன். அப்படித்தானே உன் நினைப்பு? இல்லையா? இதைக்காட்டிலும் மனிதனுக்கு வேறென்னதா னிருக்கிறது உலகில்? இந்த ஆசையையும் தலை முழுகிவிட வேண்டுமா?” என்று சிறிது கடுமையும், பரிதாபமும் கலந்த குரலில் கூறினர் சொக்கலிங்கம்.

“ஆமாம்! உலகில் இதைக்காட்டிலும் மனிதன் இன்பமடையும் வேறு காரியமேயில்லையா? எல்லாரும் இப்படித்தான் பெண்ணாசையும், பிள்ளைப்பைத்தியமும் பிடித்து அலைகிறார்களா? நம்முடைய அந்தஸ்திற்கும், வருமானத்திற்கும் இந்த இரண்டு குழந்தைகளே போதும், இன்னும் நம் தலையில் நாமே பெருஞ்சுமையை ஏற்றிக் கொண்டு தவிக்கவேண்டுமா? இருக்கும் குழந்தைகளையே அவர்களின் பிற்காலத்தில் கவுரவமாகவும், பகுத்தறிவுடனும், வாழும் வகை செய்து விட்டால் போதுமானது. நமது சக்தி இதற்கே போதுமா? போதாதா? என்ற நிலையிலிருக்கும் போது மேலும் மேலும் பாரத்தை அதிகப்படுத்திக் கொள்வதென்றால் அது அறிவீனமல்லவா? எனவே இனி நாம் நமக்காகவன்றி குழந்தைகளுக்காகத்தான் வாழ்பவர்களாயிருக்க வேண்டும். அவர்களின் நன்மைதான் நமது இன்பம். நமது லட்சியம், பெருமை எல்லாம்! இதைத்தான் நான் விரும்புகிறேன். உங்களுக்கு இஷ்டமானால் இத்திட்டத்தின்படி நடந்து கொள்ளுங்கள். இல்லையானால் என்னைப் பாதிக்காத முறையில் உங்கள் இஷ்டப்படி யெல்லாம் நடந்துகொள்ளுங்கள். நான் குறுக்கிடவில்லை. என்னைப் பொறுத்த மட்டில் உயிர் உள்ளவரைக் நம் குழந்தைகளுக்காக உழைத்துவிட்டு உயிர் துறப்பதென்று தீர்மானித்து விட்டேன். அந்த தீர்மானத்தினின்றும் நான் பிறழப் போவதில்லை. எதற்கு வீண்வாதம்!” என்று தன்னையறியாத வேகத்திலே படபடவென்று கூறிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் தன் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டாள் விசாலம்.

அவள் இருதயத்திலே ஏதோ ஓர் அருமையான, துணிகரமான காரியத்தைச் செய்து வெற்றியடைந்ததைப் போன்ற நினைவும், உணர்ச்சியும், சாந்தியும் நிலவின. ஆனால் சொக்கலிங்கம்? அவர் நிலைமைதான் கவலைக்கிடமானதாயிருந்தது. விசாலத்தின் அந்த முடிவான பதிலும், பேசின தோரணையும், கண்டிப்பும், சொக்கலிங்கத்தைத் தூக்கிவாரிப் போட்டன. அவர் அறிவு குழம்பியது. என்ன சொல்வது, என்ன செய்வது என்பதே அவருக்குப் புரியவில்லை, விசாலத்தின் தாய் வீட்டு பூஸ்திதியிலிருந்து மாதந்தோறும் அவளுக்கு 25 ரூபாய்க்குக் குறையாமல் வருவாய் கிடைத்து வருகிறது; ஆயுள் வரை கிடைக்கவும் செய்யும். அது சொக்கலிங்கத்திற்கு ஒரு பெரிய அனுகூலமாயிருந்து வந்தது. மேலும் சோற்றுக்காகவோ, துணிமணிகளுக்காகவோ விசாலம், கணவன் கையை எதிர்பார்க்கும் நிலைமையில் இல்லை. எனவே அந்த விஷயமாக விசாலத்தைத் துன்புறுத்தவோ, பயமுறுத்தவோ வழியில்லை. ஆகவே அவளுடைய அபிப்பிராயத்தை, திட்டத்தை கட்டாயமாக ஆமோதிக்கும் நிலைமைக்கு ஆளாகிவிட்டார் சொக்கலிங்கம்! வேறு வழியில்லை.

## 2

சொக்கலிங்கமும், விசாலாட்சியும் இந்துசமூக வழக்கப்படி பெற்றோர்களின் விருப்பத்தை அனுசரித்து தம்பதிகளானவர்கள், அழகு, குணம், அறிவு, கல்வி, வயது முதலிய ஒவ்வொரு அம்சங்களிலும் தம்பதிகளுக்குள் மடுவுக்கும் மகாமேருவுக்கும் உள்ள ஒற்றுமைதான்! கிறிக்கும் பாம்புக்குமுள்ள நேசப்பான்மை தான்! ஆம்! விசாலம் சொக்கலிங்கத்தின் இரண்டாவது மனைவி!

விசாலம் அன்பு நிறைந்த உள்ளமும், அளவுக்கு மிஞ்சிய சகிப்புத் தன்மையும், நிதானமும் வாய்ந்தவள். ஆகவே அவருடன் ஒருவாறு ஊமை ராஜா விளையாட்டைப் போல வாழ்க்கையை நடத்திவந்தாள். இந்த நான்கு வருடகாலங்களில் அவளது வாழ்க்கையிலே இன்பம் என்பது முயற்கொம்பு தான். ஆயினும் இந்த நிலைமையிலுங்கூட ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழவிகள் அவர்கள் வீட்டில் சஞ்சரிக்கின்றன. விசாலம் இரண்டு குழந்தைகளுக்குத்தாயாகி விட்டாள்.

ஆம்! எத்தனை நாளைக்குத்தான் தன்னலங் கருதாமல் பிறருக்காக மனமொவ்வாத துன்பவாழ்வில் ஈடுபட்டுக்கிடக்க முடியும்? விசாலம் இந்த ஊமை ராஜா விளையாட்டையும் பகிஷ்கரித்துவிட விரும்பினாள். இன்பத்தைப் பெறவிட்டாலும் போகிறது, துன்பம் வராமலாவது இருக்கவேண்டும் என்பது தான் அவள் நோக்கம். அன்று காலையில் ஒரு பத்திரிகையில் அவள் படித்த “கர்ப்பத்தடையின் முக்யம்” என்ற ஒரு கட்டுரையே அவளுக்கு அந்த தைரியமும், ஊக்கமும், துணிகரமும், கொடுத்தது. அதன் பயனாய் தன் மனதில் எழுந்த எண்ணத்தின் முடிவை வெகு துணிச்சலுடன் கணவனுக்குச் சமர்ப்பித்துவிட்டாள் விசாலம்.

அந்த இன்பமறுப்புத் திட்டத்தை கிரியாம்சையில் கொண்டுவர சொக்கலிங்கத்தால் சாத்தியப்படவில்லை. எனவே ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லிக் கொண்டு அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்றுவிடுவார். எத்தனையோ காரணங்களால் நிம்மதியின்றித் தவிக்கும் பெண்களிடம் அவர் தன் இரவை நிம்மதியாகக் கழித்துவந்தார்! இதனை விசாலம் மறுப்பதில்லை.

இளமையும், அழகும் பொங்கிய விசாலத்தின் கதியென்ன? அவள் இதயம் இன்பத்தை விழைகின்றது. ஆனால் சொக்கலிங்கத்தின் கூட்டுறவைக் கட்டோடு வெறுக்கின்றது. எனவே அவள் பாலயோகினியாக மேலும் இரண்டாண்டுகளைக் கழித்தனள்.

## 3

வேணுகோபால் சொக்கலிங்கத்தின் ஒன்றுவிட்ட சகோதரன்; மிகுந்த அழகன். நல்ல படிப்பாளி, சொக்கலிங்கம் குடியிருக்கும் ஊருக்கு எட்டாவது மைலில் உள்ள கண்ட புரத்திலுள்ள பொதுநல வாசகசாலைக்கு வேணுதான் பொறுப்பாளி. பொதுக்காரியங்களில், பொதுஜன முன்னேற்றத்தில் அவனுக்கு மிகுந்த அக்கரையுண்டு.

விசாலம் ஓய்வு நேரங்களில் அந்த வாசகசாலையினின்று புத்தகங்களும், பத்திரிகைகளும் வரவழைத்துப் படிக்கத் தொடங்கினாள். அவைகளில் மிளிரும் சமுதாய சீர்திருத்தக் கட்டுரைகளும், புரட்சிக்கருத்துகள் நிறைந்த கதைகளும் அவள் மனதைக் கவர்ந்தன. வேணுவும் நன்றாக எழுதக்கூடியவன். சில சமயங்களில் அவனுடைய சட்டுரைகளும், கதைகளும் பத்திரிகைகளில் வரும். அவைகளைப் படிப்பதில் விசாலத்திற்கு ஒரு தனிப்பிரியம்! அந்தப்பிரியம் காளடைவிலே வேணுவின் பால் கொண்ட காதலாகப் பரிணமித்தது. ரஸிகத்தன்மை நிறைந்த அவளுடைய இளம் இதயத்திலே வேணு சாஸ்வதமான இடம் பெற்றுவிட்டான். பத்திரிகைகளைச் சாக்கு வைத்துத்கொண்டு அடிக்கடி வேணுவுக்கு கடிதம் எழுதத் தொடங்கினாள். அவனும் பதில் விடுப்பான். விசாலத்தின் அழகும், குணமும், அவளது பரிதாபகரமான வாழ்வும் வேணுவின் மனதில் பச்சாத் தாபத்தை யெழுப்பி அவனை அவளுடைய காதலுக்கு இரையாக்கிவிட்டன. அவர்கள் கடிதத்துவரை காதலர்களாகிவிட்டனர். பல சமயங்களில் நேரிலும் சந்தித்தனர். ஆனாலும் அவர்கள் வரம்பு கடந்து செல்லவில்லை. என்றாலும் அவர்கள் சந்தித்த ஒவ்வொரு முறையும் அளவுகடந்த காதலை உள்ளத்தில் ஏற்றியவண்ணமே பிரிந்தனர்,

சில சமயங்களில் விசாலம் “தன் அன்பு செல்லும் வழி தவறு” என்பதை உணர்ந்து தன் செய்கையை வெறுப்பாள். வேணுவின் மனைவிக்குத் துரோகம் செய்யலாமா? என்று வருந்துவாள். எனினும் வேணுவின்மேல் கொண்ட அன்பை மீட்கும் சக்தியைப் பெற்றாளில்லை.

சொந்த மனைவியிருக்க மற்றொரு மாதை நேசிப்பது அடாத செய்கையென்பதை வேணுவின் மனம் அவனுக்கு அறிவுறுத்தாமலில்லை. எனினும் அவன் அந்தரங்க விழைவும், அவனுடைய அன்பின் வேகமும் அவனை அடிமை கொண்டன.

## 4

அன்று மாசிப் பௌர்ணமி தினம். மாலை 7-மணியிருக்கும். சந்திரன் தன் கீழ்த்திசையிலே முழு வன்மையுடன் பொற்கதிர்களை வாரியிறைத்துப் பொங்கி யெழுந்துகொண்டிருந்தான். குளிர்ந்த காற்று வீசிற்று.

அந்த மாடியின் பின் முற்றத்திலே “மாலை வருகிறேன்” என்ற வேணுவின் கடிதத்தைக் கையில் வைத்தவளாய் சந்திரனை நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தாள் வனிதை விசாலம். அவள் மனம் இயற்கையழகில் சென்றுலயித்திருந்ததெனினும், “இச் சமயத்தில் அவன் என்னருகிலிருந்தால்!” என்று நினைக்கும்பொழுது அவள் உள்ளமும், உடம்பும் தணலாய் எரிந்தன. காதலால் கரைந்தன!

சிறிது நேரத்தில் யாரோ மாடிப்படியில் ஏறிவரும் ஓசை கேட்டது. மிகுந்த ஆவலுடன் அப்பக்கம் திரும்பினாள்—வேணு!

விசாலத்தின் மனதில் தோன்றிய மட்டற்ற மகிழ்ச்சியும், குதூகலமும் பொங்கி மலர்ந்தன அவள் வதனத்திலே! அபாரமான அன்பு காட்டி அவனை வரவேற்றாள் வனிதை.

“என்ன வேணு! மணி ஏழுக்கு மேலாய் விட்டதே, சாயங்காலமே வந்திருக்கப்படாதா? நீ வரும் வழியைப்பார்த்துப் பார்த்து என் விழிகள் பூத்துவிட்டன” என்றாள் விசாலம்.

“புறப்படுவதற்கே மணி 6-ஆகிவிட்டது. எங்கே, அண்ணா ஊரிலில்லையா? குழந்தைகளைக்கூடக் காணோமே!” என்று வினவினான் வேணு.

“பக்கத்துக் கிராமத்தில் சிவன் கோவிலில் ஏதோ உற்சவமாம். அவர்தான் கடவுள் பித்துப் பிடித்தவராயிற்றே! குழந்தைகளையும் அங்கு கூட்டிக்கொண்டு போயிருக்கிறார். காலையில்தான் வருவார்கள். நீ ரொம்ப நேரத்துக்கு முன்பே வந்துவிடுவாயென்று நினைத்தேன். போகட்டும் இவ்வளவு தயவாவது வைத்திருக்கிறாயே அதுவே போதுமானது” என்று கூறினாள் விசாலம்.

“என்ன செய்வது? வீட்டை விட்டுக் கிளம்புவதென்றால் லேசில் இல்லை. பல தொந்தரவுகள், மறுக்கமுடியாத முக்கிய அலுவல்கள், போதாக்குறைக்கு என் மனைவியின் சந்தேகக் கேள்விகள். இவைகளையெல்லாம் சரிப்படுத்தி விட்டு வருவதென்றால் அப்படி முடிகிறதா? சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் தயவில்லையென்று அர்த்தமா என்ன?” என்றான் வேணு.

### “மனைவியின் சந்தேகக் கேள்விகள்”

இவ்வார்த்தை விசாலத்தின் இருதயத்தை வாள்கொண்டறுத்தது. “ஐயோ! நான் பாவி! மகா துரோகி! வஞ்சகி!” என்று அலறியவளாய் கீழே சாய்ந்துவிட்டாள் விசாலம். வேணு பதறிப் போய் விட்டான்.

அவள் சுயவுணர்வு பெற்று கண் விழிக்கும்பொழுது தான் வேணுவின் மடிமீது அவனது அணைப்பில் கட்டுண்டு கிடப்பதையுணர்ந்தாள். அவளது உள்ளமும் உடலும் ஒருங்கே சிலிர்த்தன. “அந்தோ! வேணு! என்னைத் தீண்டாதே! உன் மனைவிக்குப் பெரிய துரோகமும் உனக்குப் பெரிய அபகீர்த்தியும் தேடிய சண்டாளி நான். என்னைவிட்டுவிடு” என்று படபடப்புடன் கூறியவளாய் அவன் பிடியினின்றும் விடுபடமுயன்றாள் விசாலம்.

அமைதியுடன் வேணு கூறினான். “விசாலம்! எதற்காக நீ இவ்வளவு துக்கப்பட வேண்டும்? வீணாக உன் மனதை யலட்டிக்கொள்கிறாய். நீ யாருக்கும் துரோகம் செய்யவில்லை. நான் சொல்லுகிறேன். இதோ இப்படியே என் மடியில் படுத்தவண்ணம் கேட்பாயாம்......எதற்காக உன் உடம்பு இப்படி நடுங்குகிறது? தைரியமாயிரேன். இதோ என்னைப்பார்....” என்று அன்புடன் அவளை வாரி

[8-ம் பக்கம் பார்க்க]

# ★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 11
25-6-49 சனிக்கிழமை


## அந்த வட்டாரத்திலும் சுதந்தர கீதம்!

**"இந்த சட்டத்தில் ஏராளமான அளவுக்கு விஷமத்தனம் புகுத்தப்பட்டிருக்கிறது என்பது எனக்கு புருகத் தெரிகிறது. இந்த சட்டம் மாகாணங்களின் உரிமைகளை மத்திய சர்க்கார் தட்டிப் பறித்துக் கொள்ளும் தன்மையில் அமைந்திருக்கிறது. இதுபோலவெல்லாம், மாகாணங்களின் உரிமைகளை மத்திய சர்க்கார் மட்டுப் படுத்திக் கொண்டே போவார்களானால், கடைசியில், மாகாண சுய ஆட்சி என்பதே வெறும் கேலிக்கூத்து என்பதாகத்தான் முடிந்துவிடும். எனவே இந்த சட்டத்தை உடனடியாக வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்."**

இந்த வாசகங்களைப் படிக்கும் போது, நாம் அடிக்கடி கேட்டுக் கேட்டுப் பழக்கமான ஒரு குரல்—ஈரோட்டுக் குரல் பேசுவதுபோல இருக்கிறது! ஆனால் உண்மை அதுவல்ல! இந்த வாசகங்களை ஒலித்த குரல், நாம் இதுவரை கேட்டறியாத குரல்; புத்தம் புதிய குரல்; நம்மை ஏசி ஏசிப் பழக்கப்பட்ட குரல்; திராவிடர் இயக்கத்தைத் தாக்கித் தாக்கி நாத்தழும்பேறிய குரல்; தேசீய வட்டாரத்துக் குரல்! ஆம்! அத்தகைய குரல் தான் இத்தகு சுதந்தர கீதத்தை முழக்கியிருக்கிறது — டில்லியில்! இரண்டு வாரங்கட்கு முன்னால்!

இப்போதெல்லாம், தினசரி ஏடுகளை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்தால், ஒவ்வொரு நாளும், ஏதாவது ஒரு துறையில் இல்லாவிட்டால் மற்றொரு துறையில், ஒரு காரணத்திற்கு என்று இல்லாவிட்டால் மற்றொரு காரணத்தைக் காட்டி, மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார்களின் உரிமைகளை மட்டந்தட்டினார்கள் அல்லது மட்டந் தட்டப் போகிறார்கள் அல்லது மட்டந் தட்டுவது எப்படி என்பதைப் பற்றிக் கூடிப்பேசி வருகிறார்கள், என்பன போன்ற ஏதாவது ஒரு சேதி வாராமல் இருப்பதில்லை. அப்படி வழக்கமாக வரும் வேதனைச் சேதிகளில் ஒன்றுதான் முதலில் பொறித்துள்ள வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தைப் பற்றிய சேதியும்!

இப்போது டில்லி அரசியல் அமைப்பு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவருகிறதே எதிர்கால இந்தியாவுக்கான அரசியல் சட்டம், அந்த சட்டத்தின்படி, ஆட்சி உரிமைகள், (1) மாகாண சர்க்கார்களின் உரிமைகள் என்றும், (2) மத்திய சர்க்காரின் உரிமைகள் என்றும், (3) இரண்டு சர்க்கார்களுக்கும் பொதுவாக உள்ள உரிமைகள் என்றும் மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால், சென்ற கிழமை, திடீரென்று, மாகாண சர்க்கார்களுக்கென்றே தனியாக உள்ளனவே ஆட்சி உரிமைகள், அவற்றைக் கூட, சில சந்தர்ப்பங்களில், மத்திய சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம் என்பதாக ஒரு புது சட்டம் கொண்டுவரப்பட்டு, டில்லி மேலிடத்தாரால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதாவது, இச்சட்டத்தின்படி மாகாண ஆட்சியாளர்கள் சுதந்தர புருஷர்களாக உலவ முடியாது. மத்திய சர்க்கார் இட்ட கட்டளையை இட்டது இட்டபடி நிறைவேற்றி வைக்கும் ஏவலர்களாகவே உயிர்வாழ முடியும். இவ்வண்ணம் மாகாண சர்க்கார்களை டில்லி தேவதைகளின் அடிமைகளாகவும் பணிபாட்களாகவும் கொடிதாங்கிகளாகவும் எடுபிடிகளாகவும் ஆக்கிவைக்கும் இந்த அறக்கொடிய சட்டத்தைத்தான் **தோழர் அழகேசன்** என்பவர், காங்கிரஸ்வாதி, செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து காங்கிரசின் சார்பில் அரசியல் அமைப்பு மன்றத்திற்கு உறுப்பினராகச் சென்றிருப்பவர், அஞ்சாநெஞ்சுடன், காரசாரமாக எதிர்த்துப் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சின் ஒரு பகுதிதான் நாம் முதலில் பொறித்திருக்கும் வாசகங்கள்.

காந்தியைப் போற்றி, கதரை உடுத்தி, கைராட்டையைச் சுழற்றி, வந்தே மாதரம் ஒலித்து, ஜே ஹிந்த் முழக்கி, பாரதமாதாவை பஜித்து, இந்தியா ஒரே நாடு—அதனை தென்னாடு வடநாடு என்றெல்லாம் பிரிப்பது பாவம் என்று கருதிடும் மனப்போக்குப் படைத்த அன்பர் அழகேசனுக்கே, மத்திய சர்க்காரின் எதேச்சாதிகார நடத்தையும் ஏகாதிபத்தியப் பண்பாடும் இவ்வளவு மனக்கொதிப்பைத் தந்திருக்கிறது என்றால், தென்னாடு தனி நாடாகப் பிரிந்து சுதந்தரபுரியில உலவிட வேண்டும் என்னும் விடுதலை வேட்கை படைத்த நமக்கெல்லாம் எவ்வளவு ஆத்திரத்தையும் மனக் கொதிப்பையும் தருவதாக இருக்கும் இந்தப் புது சட்டம் என்பதை நாம் கூறத் தேவையில்லை.

ஆனால் ஒரு சேதியை மட்டும் நாம் கூறவேண்டியது மிகவும் அவசியம். தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்கள் உள்ளத்திலேகூட, "வடநாட்டு ஏகாதிபத்தியம் வளர்ந்துகொண்டே வருகிறது—அதன் வலையிலிருந்து தென்னாட்டை மீட்க வேண்டியது நம் கடமை" என்ற உரிமை உணர்ச்சி வலுப்பெற்று வருகிறது. நாளுக்கு நாள், தேசிய வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள இந்த சுதந்தர வேட்கை பெருகிக்கொண்டே வருகிறது. இன்னமும், தென்னாடு தனிநாடாக இருக்கவேண்டும் என்று வெளிப்படையாக வீரமுழக்கமிடுகிற அளவுக்கு அந்த உணர்ச்சி வலுப்பெறவில்லை என்றாலும், உணர்ச்சியின் வேகமும் ஆழமும் பலமும் விநாடிக்கு விநாடி, நாளுக்கு நாள், கிழமைக்குக் கிழமை, அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஆம் அது உண்மை என்பதற்கான நல்லதோர் நற்சான்றுதான் அன்பர் அழகேசன் சென்ற கிழமை டில்லி அரசியல் அமைப்பு மன்றத்தில் முழக்கியுள்ள சுதந்தர கீதம்!

Best copy available.



(8-ம் பக்கத் தொடர்ச்சி)

றத் தாழ்வு படாதபடி சுற்றிக் கடிதத்தை வாசித்தான். நாகமாலை அக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தாளென்று பார்க்கலாம்: "கட்டியங்காரன் நெருப்பி லிடப்பட்ட பொன்னைப்போல் வெம்பி யிருக்கிறான். அங்ஙனம் வெம்பி, நஞ்சையுண்ட கடவுள்போல் கோபங்கொண்டு, தன் கருத்தை இன்று என்னிடம் சொல்லவும் செய்தான். அவன் சீவகனைக் கொல்ல நினைத்திருக்கிறான். ஆதலால், சீவகனை நகரத்துக்கு வெளியே போக்கி, ஒரு பத்திரமான இடத்தில் பாதுகாத்து வைக்கவேண்டும்." இச் செய்திகளைக் கூறும் சீவக சிந்தாமணிப் பாட்டுகள் பின்வருவனவாகும்:

"மறைவல்லாற்கு உரைக்கும் போழ்தில்
கோயிலுள் நின்று மாலைப்
பிறைவெல்லு நுதலினாள் ஓர்
பெண்கொடி வந்து கூந்தல்
உறைசெல நீக்கிப் பைந்தாள்
ஒண் மணிக் குவளை நீட்ட
நறைவெல்லு நாக மாலை
நோக்கொடு பூக்கொண் டானே.
"நல்லவள் நோக்க நாய்கன்
தேர்ந்து பூங்குவளைப் போதின்
அல்லியுள் கிடந்த வோலை
தாளது சலாகை யாதல்
சொல்லுமென்று ஆய்ந்து கொண்டு
துகிலிகைக் கணக்கு நோக்கி
வல்லிதிற் சலாகை சுற்றி
ஓலையை வாசிக் கின்றான்.
"நம்பனை நகரி னீக்கிச்
சேமத்தால் வைக்க; தீபுள்
செம்பொன்போல் பெரிதும் சேந்து
செருத்திட லூற்று நின்றான்;
வெம்பினான்; காரி யுண்டிக்
கடவுளிற் கனன்று வேந்தன்
இம்பர்இன்று எனக்குச் சொன்னான்
இதுபட்ட தடிகள் என்றாள்."
இது நிற்க.

* * *

யுத்தம், வெள்ளம், நெருப்பு, பூகம்பம் முதலிய இடையூறுகள் காரணமாக ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையிலுள்ள போக்குவரவு சாதனங்கள் கெட்டுப்போகும்போது, அந் நாட்டார் புறா முதலிய பறவைகளைப் பழக்கி, அவைகள் மூலமாகக் கடிதங்கள் அனுப்பும் வழக்கத்தை இன்றும் நாம் காண்கிறோம். இந்தக் காரணங்களேயல்லாமல், ஒருவர் மற்றொருவருக்கு எழுதும் இரகசியக் கடிதத்தை, மனிதர்களை நம்பிக் கொடுத்தனுப்ப முடியாதென்று கருதும்போதும் கூட புறா முதலிய பறவைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய கடிதமொன்றைச் சீவகன் எழுதினான். ஆனால் அது குணமாலை என்னும் நங்கைக்கு எழுதிய காதல் கடிதமாகும். காதல் கடிதங்களெல்லாம் இரகசியக் கடிதங்களல்லவா? ஆகவே, சீவகன் தான் எழுதிய ஓலையையும் தனது மோதிரத்தையும் கிண்கிணியில் மறைத்து வைத்து, அதை ஒரு கிளியின் வசம் கொடுத்து, குணமாலைக்கு அனுப்பினான். ஒரு கிளி தினைக் கதிரைக் கொய்துகொண்டு போகிறதென்று பிறர் நினைப்பார்களேயல்லாமல், அது ஒரு முடங்கலைக் கொண்டு போகிறதென்று யாரும் நினைக்கமாட்டார்கள்.

"கொடுஞ்சிலையான் ஓலை
குணமாலை காண்க!
வடுந்துயரம் உள்சுடவெந்து
ஆற்றேன் ஆற்ற
விடுத்தசிறு கிளியால்
விம்மல்நோய் தீர்ந்தேன்
நெடுங்கணாள் தானும்
நினைவகல்வா ளாக."

என்று சீவகன் முடங்கலை ஆரம்பித்து எழுதிக்கொண்டு போகிறான். அவன் முடங்கலின் உள்ளுறை பொருளை இப்போது காண்போம்:

"சீவகன் ஓலையைக் குணமாலை காண்பாளாக. காதல் நோய் சுடுதலினாலே மனம் புழுங்கி பொறுக்க முடியாத துன்பத்தை அடைந்தேன். அப் பெருந்துன்பம் நீ வரவிட்ட கிளியால் தீர்ந்தது. நீயும் வருத்தத்தை விட்டுவிடு.

"உனது பெற்றோர் கருதினபடியே, மிகுதியான பொருளையும் வள மிகுந்த நாட்டினையும் உனக்கு விலையாகக் கொடுத்து உன்னை மணந்தே தீருவேன். இது உறுதியான பேச்சு. இதில் தவறமாட்டேன்.

"அப்படி என் சொல் தவறி, உனக்கு மாலையிடாமற் போவேனாயின், போரில் அஞ்சி புறமுதுகிட்டு ஓடுகின்றவர்மேல் படைக்கலங்களை விடும் இழிந்தோர் எய்தும் பாவமும் பழியும் என்னைச் சேருவதாக."

சீவகன் மேற்கொண்டிரு[...]
அறப்போர் முறையினையும், [...]
னது வீரத்தையும் காதலுணர்[...]
யையும் கூட கடிதம் ஒருங்[...]
காட்டுகிறதல்லவா?

* * *

ஒரு காவியத்தின் கதைப் போ[...]
கில் வரும் எல்லா நிகழ்ச்சிகளை[...]
அக் காவிய ஆசிரியர், தன் கூற்[...]
கவே கூறிவிடாமல், ஒரு பாத்தி[...]
மற்றொரு பாத்திரத்திற்கு எழுத[...]
கடிதம்மூலமாய்ச்சிலநிகழ்ச்சிக[...]
வாசகர்கள் அறிந்து கொள்ளு[...]
படி விட்டு விடுவதில் ஒரு நய[...]
இருக்கிறது. நாம் மேலே கண்[...]
சீவகனின் கடிதம் இதற்கு ஓ[...]
எடுத்துக் காட்டாகும்.

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்கள் விட்டுவிட்டு, தொட[...]
பற்று என் உள்ளத்தி[...]
தோன்றித் தோன்றி மறைந்[...]
கொண்டிருந்தன!

திடீரென்று நான் திடுக்கிட்[...]
டேன்! எவரது குளிர்ந்[...]
கரமோ என் தோளின் மீ[...]
இருக்கக் கண்டேன்! என் வா[...]
வில் இப்படி நடப்பது இ[...]
தான் முதற்தடவை! திகை[...]
தேன்! தைரியம் கொ[...]
யாரது என்று பார்க்கத் தி[...]
பினேன்! என் திகில் இன்னு[...]
அதிகமாயிற்று! உள்ளம் பத[...]
யது!

அற்புத ஓவியம்! கற்பனைக்கு[...]
மெட்டாத அழகு மிக்க சித்தி[...]
ரம்! பெண்! புன்னகை பூத்த[...]
முகத்தோடு, ஆவல் நிறைந்த[...]
கண்களோடு, துடிதுடிக்கும்[...]
இதழ்களோடு அவள் என் பக்[...]
கம் நின்றிருந்தாள்!

(தொடரும்)


"போர்வாள்"

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 [illegible] |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யணைத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

தன் வாழ்நாட்களிலே ஒரு நாளும் கண்டறியாத அந்தப் புதிய இன்பத் தேன் குடத்தில் தன்னை யறியாமல் முழுகி முழுகித் திளைத்தாள் அந்த யுவதி. சற்று முன் கொண்ட துன்பமும், பயங்கரமான நினைவுகளும், பீதியும் சூரியன் முன் பனிபோலப் பறந்தன. அவள் உள்ளத்திலே இன்ப உணர்ச்சி நிறைந்து வழிந்தது. [illegible]வதனத்திலே புன் முறுவல் தவழ்ந்தது. இதனைக்கண்ட வேணுவின் [illegible]மும், முகமும் மலர்ந்தன.

[illegible]ண்டும் வேணு கூறினான் "ஒரு [illegible]னும் பெண்ணும் மனதாரக் [illegible]தலிப்பார்களானால் அவர்கள் [illegible]சகிப்பதில் தவறென்று [illegible]ல்லை.

[illegible] உண்மையான காதலர்கள்தான் [illegible]திபதிகளாக வாழவேண்டியவர் [illegible]. ஆனால் தற்கால சமுதாயச் [illegible]ட்டம் காதலைக் கொலை செய் [illegible]து. நாம் கண்மூடி வழக்கத்திற் [illegible] அநியாயத்திற்கும் தான் [illegible]படுகிறோமே யொழிய [illegible]யத்திற்கன்று. நாம் சுதந்திர [illegible]ங்களான ருஷியாவிலோ, பிரான் [illegible], ஜப்பானிலோ பிறந்திருந் [illegible] இந்தச் சிறு கவலையும் [illegible] யணுகாது. தற்போது [illegible] வேண்டுவது "விடுதலை" [illegible] உரிமை, மாதர் சுதந்திரம்! [illegible] நாம் வழி காட்டிகளாக [illegible]போமே! உன் அச்சத்திற்கு [illegible]ங்கினால் நாம் காதலுக்குத் [illegible] துரோகம் செய்தவர்களா [illegible]ம்!" என்று அவளை இறுகப் கட்டியணைத்து அவள் செவ்விய அதரங்களை ருசித்தான் வேணு. அந்த இளம் சன்யாசினி, இல்லற இன்பத்தை மறுத்து வெறுத்த விசாலம், ஒரேடியாக நான்காவது படியிலிருந்து இரண்டாவது படிக்குத்தாவி இன்ப வெள்ளத்திலே இரண்டறக் கலந்துவிட்டாள்! இருவரும் தம்மை மறந்தனர்.

## 5

மாதங்கள் இரண்டு கடந்தன. விசாலத்தின் அகத்திலே இன்பமும் துன்பமும் மாறிமாறி எழுந்து மகிழவும் கலங்கவும் செய்து கொண்டிருந்தன. அன்று வேணு சொல்லிய **விவாக விடுதலை, மாதர் சுதந்திரம், மறுமண உரிமை** எல்லாம் அவள் மனதில் பதிந்து போயின. ஆனால் தன் கணவனையும், தான்பெற்ற குழந்தைகளையும் பார்க்கும்போது அவள் மனம் பெரிதும் வேதனை யடைந்தது. "குழந்தைகளின் எதிர்கால நன்மைதான் நமது லட்சியம், நமது இன்பம், நமது பெருமை" என்றெல்லாம் கணவனிடம் சொல்லியது அவள் ஞாபகத்திற்கு வந்தது, "சே! சே! நாம் பெரிய தவறு செய்துவிட்டோம். நமக்கு என்ன இன்பம் வேண்டியிருக்கு!" என்று அவள் மனம் அவளை இடித்தது. என்ன செய்வதென்று தோன்றாமல் விசாலம் தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவள் மனதில் சாந்தியில்லை!

இந்த நிலையில்தான் வேணுவிடமிருந்து அந்த அழைப்புத்தாள் கிடைத்தது. நல்ல நடுப்பகல், வெய்யில் நெருப்பாக எரிகிறது, மாடியில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் அதை மூன்றாவது முறையாகப் படித்தாள் விசாலம்,

"அன்பே! என் குழந்தை ராமுவின் வருடப்பூர்த்தி விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளேன். விருந்து, கேளிக்கை எல்லாம் உண்டு. ஆனால் உன் வரவுதான் விழாவையும், என் மனதையும் பூர்த்தி செய்யும் என்று எதிர் பார்க்கிறேன்"

**உனது வேணு.**

அங்ஙனமே விசாலம், குழந்தைகளுடனும், கணவன் சொக்கலிங்கத்துடனும் கண்டபுரம் சென்றாள். வேணு சற்று பணம் படைத்தவன், எனவே விழாவின் அமோகம் சொல்லும் தரமன்று, "வெகு விமரிசையுடன் நடந்தேறிற்று" என்றால் அதனை ரத்னச் சுருக்கமாககுறிப்பிடுவதாகும்.

அன்று மாலை 6-மணி யிருக்கும். வேணுவின் வீட்டுப் பின்புறத் தோப்பிலே ஓங்கி வளர்ந்துள்ள நறுமலர்ச் செடிகளுக் கிடையிலே விசாலம் நின்றுகொண்டிருந்தாள், அவள் இதயம் பலத்த யோசனையில் ஈடுபட்டிருந்தது. அச் சமயத்தில் கமலம்—வேணுவின் மனைவி, "என்ன விசாலம்! தனியாக நின்றுகொண்டிருக்கிறாய்? முகம்கூட வாடியிருக்கிறதே ஏன்? என்ன சமாச்சாரம்?" என்று கேட்டவண்ணம் அங்குத் தோன்றினாள்.

"ஆம்! பிச்சைக்காரிக்கு வாட்டமில்லாமல் சந்தோஷமிருக்குமா?" என்றாள் விசாலம்.

"என்ன! பிச்சைக்காரியா? நீயென்ன செய்வாய் உன் தாய் வீட்டு வருமானத்தின் பெருமை உன்னை அப்படிச் சொல்லச் செய்கிறது" என்றாள் கமலம்.

"காசு பணம் பிச்சை யெடுத்தால்தான் பிச்சையா? ஒருவகையில் நான் பிச்சைக்காரியே, **எனக்குப் பிச்சையிட்டவளும் இடுபவளும் நீயே!**"

"விசாலம்! என்னென்னமோ பேசறே, எனக்கு ஒன்றும் புரியவில்லையே, சற்று விளங்குகிற மாதிரிதான் சொல்லேன்"

"என்னை மன்னிப்பாயா?"

"மன்னிப்பதாவது, அப்படியென்ன நீ செய்துவிட்டாய்? சரி எதுவாயிருந்தாலும் மன்னிக்கிறேன் சொல்லு"

மிகுந்த ஈனஸ்வரத்தில், நடுங்கிய குரலில் விசாலம் கூறினாள்:—"கமலம்! நான் ஒரு பெரிய தவறு செய்துவிட்டேன். அதை உன்னிடம் சொல்லாமலிருக்க என் மனம் இடந்தரவில்லை. நான் உன் கணவரை நேசித்தேன், அவரும் என்பாலிரக்கம் கொண்டார், இணங்கியும் விட்டார், **நாங்களிருவரும் விவாகரத்து செய்துகொண்டு கணவனும் மனைவியுமாக வாழ நினைத்தோம்.** ஆனால் என் மனம் என்னவோ யார்யாருக்கோ துரோகம் செய்வதாக சதா என்னை உறுத்துகிறது, தைரியமில்லை, சாந்தியில்லை. உன் மன்னிப்புத்தான் இப்பொழுது எனக்கு வேண்டும். இல்லையேல் என் நெஞ்சு வேகாது. எங்களிருவரையும் மன்னிப்பாயா?"

"என்ன விசாலம்! என் கணவர் காட்டிய அவ்வளவு இரக்கத்தை நான் காட்ட அருகதையற்றவளா? உண்மையில் சொல்லுகிறேன், நீ ஆச்சரியப்படவேண்டாம். பெண்ணுக்குப் பெண் இரங்காவிடில் பெண்ணுலகம் மாய்ந்தொழிவதே மேல். உங்கள் இருவர் நட்புடனும் என்னுடைய நட்பும் கலந்தொழிவதே மேல், உங்கள் இருவர் நட்புடனும், என்னுடைய நட்பும் கலக்கட்டும். மூவரும் ஒருங்கே மகிழ்ச்சியுறுவோம். முழுமனதுடனே சொல்லுகிறேன். சிலநாட்களுக்கு முன்பே உனது

(2-ம் பக்கம் பார்க்க)



**இலக்கியப் பகுதி:**

# நான் படித்த கடிதங்கள்!

★

[ வ. பா. தாமரைக்கண்ணி ]

★

[அழகிய கடிதம் ஒரு சிறந்த யாழ்போல்வது. யாழினை மீட்டினால் இன்பம் தெறிக்கும். அதுபோலவே, அழகிய கடிதம் ஒன்றைப் படித்தால், உள்ளம் இன்பக் கேணியில் துள்ளிவிளையாடும். யாழில், இன்னிசையை முழக்குவதற்கு மட்டுமல்ல, முழக்கப்பட்ட எழில் இசையை நுகர்வதற்கும் சிறப்பானதோர் திறமை இருந்தாக வேண்டும். அதுபோலத்தான், அழகிய கடிதங்களை எழுதுதற்கு மட்டுமல்ல, எழுதப்பட்ட இனிய கடிதங்களைப் படிக்கவேண்டிய முறையில் படித்து, சுவைத்து மகிழவேண்டிய முறையில் சுவைத்துணர்வதற்கும் தனியானதோர் ஆற்றல் அமைந்திருக்க வேண்டும். ஆம்! எழுதும் கலையைப் போலவே படிக்கும் கலையும் ஒரு சிறந்த கலை. இந்த இரு கலைகளிலும் சிறந்த புலமை படைத்த தோழியர் தாமரைக்கண்ணியார் தீட்டியுள்ள இக் கட்டுரை, முன்னாளில் தமிழர்கள் தீட்டிய சில முடங்கல்களையும், அவற்றின் எழிலையும் இன்பத்தையும் இலக்கியச் சுவையையும் அழகுற விளக்குகிறது.]

நாடகம், காவியம், ஓவியம், இசை முதலியவைகளைப் போலவே கடிதம் எழுதுவதும் ஒரு சிறந்த கலையாகும். ஆனால், நமது நாட்டினர் காவியம், இசை, நாட்டியம் ஆகிய கலைகளை வளர்த்ததுபோலக் கடிதம் எழுதும் கலையை அவ்வளவு அதிகமாக வளர்க்கவில்லை. ஆங்கிலேயர்கள் முதலிய மேனாட்டினர் இத் துறையில் பெரிதும் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். கடித வடிவில் உள்ள நூல்கள் ஆங்கில மொழியில் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், தமிழ் மொழியில் அப்படிப்பட்ட நூல்கள் விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய அவ்வளவு கொஞ்சமாக இருக்கின்றன. பல்லாவரம் மறைமலை யடிகள் இயற்றிய "கோகிலாம்பாள் கடிதங்கள்", புதுவை அரவிந்த கோஷ் தமது மனைவியாருக் கெழுதிய கடிதங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு, பண்டித ஜவஹர்லால் நேரு தம் மகள் இந்திரா நேருவுக்கு எழுதிய கடிதங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு—ஆகிய இவை போன்றவைகளே, தமிழில் இந்தத் துறையில் எழுதப்பட்ட நூல்களாகும்.

இந்தச் சமயத்தில், பல நூற்றாண்டுகளுக்குமுன் நமது முன்னோர்கள் எப்படிக் கடிதம் எழுதினார்கள் என்று தெரிந்து கொண்டால், அது நமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே விளைவிக்கும்.

ஒருவர் மற்றொருவருக்கு எழுதும் கடிதத்துக்குப் பழைய காலத்தில் ஓலை, முடங்கல், திருமுகம் என்னும் பெயர்கள் வழங்கி வந்தன. பெரியோர் சிறியோருக்கு எழுதும் கடிதம் என்னும் பொருளில் "திருமுகம்" என்னும் சொல் இன்று கூட ஆட்சியிலிருக்கிறது. பழைய காலத்தில் கடிதங்கள் பனை முதலியவற்றின் ஓலையில் எழுதப்பட்டமையின், அவைகளுக்கு ஓலை என்பதே பெயராயிற்று. பிற்காலத்தே, அமங்கலச் செய்திகளைத் தன்னகத்தே கொண்ட கடிதத்துக்கு 'ஓலை' என்னும் சொல் வழங்கப்பட்டது, செய்திகள் எழுதப்பட்ட ஓலையை **வளைத்துச் சுருள் செய்து** அனுப்பினார்களாகையால், கடிதங்களுக்கு "முடங்கல்" என்பதும் ஒரு பெயராயிற்று. முடங்கல்,—என்றால் வளைதல். முடங்கலைப் பற்றிய பல செய்திகள் பழைய தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவைகளில் இரண்டொன்றைப் பார்க்கலாம். முதலில் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தை எடுத்துக் கொள்வோம்.

*　*　*

பழைய சோழநாட்டுத் தலைநகரமாகிய காவிரிப் பூம்பட்டினத்தில், மாதவி என்னும் நாடகக் கணிகையோடு உல்லாசமாகக் காலம் கழிப்பதற்குக் கடற்கரைக்குச் சென்றிருந்த கோவலன், பின்னர் அவள் கற்பொழுக்கத்தைச் சந்தேகித்து, அவளை விட்டுப் பிரிந்து தன் வீட்டுக்கு வந்துவிட்டான். வந்தவன், தன் மனைவியாகிய கண்ணகியோடு ஓரிரவில் யாருக்கும் தெரியாமல் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்டு, மதுரையை நோக்கிச் செல்லும் வழியில். ஒரு நாள் காலைக்கடன்களை முடிப்பதற்காக, தனியாக ஒரு பொய்கைக் கரையை அடைந்தான்.

மாதவி நாடகக்கணிகையர் குலத்தில் தோன்றியவளேயாயினும், மற்ற நாடகக் கணிகையர் போல் எண்ணப் படத்தக்கவளல்ல. அவள் கோவலனை அவன் பணத்துக்காக நேசித்தவள் அல்ல. அவனுடைய உயர்ந்த குணங்களுக்காக அவனை உண்மையாகவே நேசித்தவளாவாள். கோவலனுடைய பிரிவுக்காக மாதவி மிகவும் வருந்தினாள். அவள் உடம்பு வாடிப்போயிற்று. ஒரு கடிதம் எழுதி, கௌசிகனென்னும் ஓர் அந்தணனிடம் தந்து, "என் கண்மணி போன்ற கோவலனிடம் இதைக் கொடு" என்று சொன்னாள். கௌசிகன் பல இடங்களில் கோவலனைத் தேடிக் கடைசியாக அப் பொய்கைக் கரையில் அவனைச் சந்தித்தான். கோவலனுடைய பிரிவால் அவன் தாய் தந்தையர் அடைந்த வருத்தத்தையும், மாதவி எய்திய வாட்டத்தையும் கௌசிகன் கூறி, அவள் எழுதிய கடிதத்தையும் கோவலனிடம் நீட்டினான்.

மாதவியின்மேல் தான் கொண்டிருந்த வெறுப்பு காரணமாக, கோவலன் அவ்வோலையை வாங்கிப் படிக்க முதலில் மனமில்லாதவனாயிருந்தான். ஆனால், அதைக் கையில் வாங்கிய பிறகு திருப்பிக் கொடுத்துவிடவும் அவனுக்கு மனம் வரவில்லை. அப்படி அவன் உள்ளத்தைக் கவர்ந்தவை, அவ்வோலையின் மேற்புறத்திலுள்ள இரண்டு விஷயங்களாகும். மாதவியும் கோவலனும் முன் இன்பமாய்க் காலங்கழித்த நாட்களில்,

மாதவி தனது கூந்தலில் ஒருவிதமான தைலம் பூசிக்கொள்வது வழக்கம். அந்தத் தைலத்தின் வாசனை கோவலனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதுவுமன்றி, அப்போதெல்லாம், மாதவி தனது கூந்தலை ஒருவிதமாய் முடிந்து அலங்காரம் செய்துகொள்வது வழக்கம். அந்தக் கூந்தல் அலங்காரத்திலும் கோவலன் வெகுவாக ஈடுபட்டிருந்தான். இப்போது மாதவியானவள் தான் எழுதிய கடிதத்தின் வாய்ப்புறத்தில் மெல்லிய ஈரமண்ணை அப்பி, அதன் மேல் தனது கூந்தல் முடிப்பை வைத்து அழுத்தி இலச்சினையிட்டாள். இலச்சினையிடுவது என்பதற்கு இப்போது முத்திரையிடுவது அல்லது ஸீல் (seal) போடுவது என்று சொல்லுகிறோம். ஆகையால், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னமேயே கடிதங்களுக்கு ஸீல் போடும் வழக்கம் தமிழ் நாட்டில் உண்டென்று அறிகிறோம். அப்படி இலச்சினையிட்டபோது, கூந்தலில் பூசிய தைலத்தின் வாசனை அப்படியே அந்த மெல்லிய ஈரமண்ணில் பதிந்துவிட்டது. கோவலன் அக் கூந்தல் முடிப்பு அழுத்தப்பட்டிருக்கும் முத்திரையைக் கண்டான். அதிலிருந்து வீசிய வாசனையையும் நுகர்ந்தான். பழைய இன்பக் காட்சிகளெல்லாம் இப்போது அவன் கண்முன் தோன்றின. மெய்ம்மறந்து, அக் கடிதத்தைத் திருப்பிக் கொடுக்க மனமில்லாதவனாய் அதை உடைத்துப் படிக்கத் தொடங்கினான்.

இப்போது, மாதவி அவ்வோலையில் என்ன எழுதியிருந்தாளென்று பார்க்கலாம்: "குற்றமற்ற காட்சியையுடைய பெருந்தகையே! தங்கள் திருவடிகளை திக்கு நோக்கி நமஸ்கரிக்கின்றேன். பெண்களுடைய சொல்லில் குற்றமிருக்குமென்று கருதப்படுவதுண்டு. அடியாள் சொல்லில் குற்றமிருக்குமாயின், அது காரணமாக இக் கடிதத்தை நிராகரித்து விடாமல், இதிலுள்ள விஷயங்களைத் தங்கள் திருவுள்ளத்தில் பதித்தருள வேண்டும். உமது தாய் தந்தையர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்யாமல், உயர்குலத்தில் தோன்றிய கண்ணகியோடு இரவு நேரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுச் சென்றதற்கு, யார் என்ன குற்றம் செய்தார்கள்? அது அறியாமையால், அது என்னுடைய குற்றந்தானோ என்று சந்தேகித்து, நெஞ்சங் கலங்கி கவலைப்படுகிறேன். எனக்கு இப்போது இன்னது செய்வதென்று தெரியவில்லை. இப்படிப்பட்ட எனது குழப்பமான மன நிலையைப் போக்கத் தாங்கள் திருவுள்ளம் பற்றவேண்டும். இப்படிச் செய்வது மூலமாய், உமது பிரிவால் நைந்துருகும் தாய் தந்தையர்களுடைய உயிரைக் காப்பாற்றி, உமது பெருங் குலத்தின் புகழுக்கு ஒருவிதமான மாசும் வராதபடி காத்தருள்வீராக."

இவ்வளவுதான் கடிதம். மாதவி இக் கடிதத்தை எழுதியதன் நோக்கம், தான் உள்ளன்புடன் காதலித்த கோவலனை மீண்டும் தன்னிடம் காவிரிப்பூம் பட்டினத்துக்கு வரவழைத்துக்கொள்வதே யாகும். ஆனால், அவள் அந்த நோக்கத்தை வெளிப்படையாகச் சொல்லாமல், எவ்வளவு நாகரிகமாகவும் நயமாகவும் அதைத் தெரிவிக்கின்றாள் பாருங்கள். நமது பண்டைக் காலத்துத் தமிழ்ப் பெண்கள் எவ்வளவு சாதுரியமாகப் பேசினார்கள், எழுதினார்கள் என்பதைக் காண நமது மனம் பரவசமடைகிறது. இச் செய்திகளை யெல்லாம்,

"போதவிழ் புரிகுழல் பூங்கொடி நங்கை
மாதவி யோலை மலர்க்கையி னீட்ட
உடனுறை காலத்து உரைத்த நெய்வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி யுணர்த்திக்
காட்டிய தாகலின் கைவிடல் ஈயான்
ஏட்டகம் விரித்தாங்கு எய்தியது உணர்வோன்"

என்னுஞ் சிலப்பதிகார அடிகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

தனக்கு மாற்றாளாகிய கண்ணகியை "உயர்குலத்தில் தோன்றிய கண்ணகி" என்று வாயாரப் புகழ்ந்தது மூலமாய், தனது சிறுமையையும் அவள் பெருமையையும் ஒளிக்காமல் ஒப்புக்கொண்ட மாதவியின் பெருந்தன்மை நமது உள்ளத்தை உருக்குகிறதல்லவா? மாதவி நயம்பட எழுதிய இக் கடிதத்தினால், கோவலனுக்கு அவளிடத்து ஏற்பட்டிருந்த வெறுப்புணர்ச்சி மாறி, அவள் குற்றமில்லாதவள், எல்லாத் தீங்குகளுக்கும் தானே காரணம் என்னும் முடிவுக்கு அவன் வந்தான்.

மாதவி எழுதிய கடிதத்தை, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் எப்படிக் காட்டுகிறார் என்பதைப் பார்க்கலாம்.

"அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி."

கடிதம் சோகம் நிறைந்த கடிதம் தான். ஆனால் அந்த சோகம் உயர்ந்த ரஸபாவத்தோடு சித்திரிக்கப்படும்போது, நமக்கு எல்லையற்ற இன்பம் தோன்றுகிறதல்லவா?

கோவலன் கௌசிகன் மூலம் தனது தந்தைக்குச் சில செய்திகள் தெரிவிக்க விரும்பினான். ஆனால், அச் செய்திகளை எழுதுவதற்கு ஓலையும் எழுதுகோலும் அக் காட்டு வழியில் அவனுக்கு ஏது? ஆகவே, மாதவி தனக்குத் தீட்டிய முடங்கலின் சொல்லும் பொருளும், தான் தனது தந்தைக்கு விடுக்க நினைக்கும் முடங்கலுக்கும் அழகாகப் பொருந்தி யிருப்பதைக் கண்டு, அதையே கௌசிகனிடம் கொடுத்துத் தனது தந்தையிடம் சேர்ப்பிக்கச் சொன்னான். இதிலிருந்து, கோவலன் மாதவியை எவ்வளவு கௌரவப்படுத்தி யிருக்கிறான் என்பது தெரிகிறது. அதுவுமன்றி, அவன் கண்ணகியோடிருக்கும் அச் சமயத்தில், மாதவியின் கடிதத்தைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பது முறைமையன்று என்பதும் கவனிக்கத்தக்கது.

* * *

மாதவி கடிதம் எழுதுவதில் மிக்க சதுரப்பாடுடையவள் என்பதை இளங்கோவடிகள் நமக்கு அடிக்கடி காட்ட முயல்கின்றார். நாம் சற்றுமுன் கண்டது சோகக் கடிதம். அதற்கு முன்பு ஒரு தடவை, மாதவி காதல் கடிதமொன்றைக் கோவலனுக்கு எழுதினாள். நாம் இப்போது செய்

(3-ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை:

ஏழாம் பகுதி

## அற்புத ஓவியம்

சிவந்தமேனி சிற்றிடை பிரேமாவும், சேரநாட்டு அதிபதி சேதனனும் சித்தம் குளிர்ந்து, சிறகு கட்டி இன்ப உலகில் தம்மை மறந்து ஆடிப்பாடிப் பறந்து கொண்டிருந்த குடிசையை விட்டு, கிழவனும் தூயமணியும் குகையில்லமிருந்த திசை நோக்கி நடந்தனர்!

வழியில், மூங்கில் புதரருகே உட்கார்ந்தனர் இருவரும். சலசலவென சப்தம் கேட்டது—திரும்பிப் பார்த்தனர்.

உலர்ந்து உதிர்ந்திருந்த சரகின்மீது எலியொன்று குதித்துக் குதித்து ஓடியது. நல்ல பாம்பொன்று சீறிக்கொண்டு அதனைத் துரத்தியது! நடந்தது இரண்டிற்கும் ஓட்டப் பந்தயம்! சிறிது நேரத்தில் பாம்பின் வாயில் சிக்கி விட்டது எலி! தவித்தது, தத்தளித்தது, கத்திப் பார்த்தது! பயனில்லை, பாம்பின் வயிறு அதன் புதைநிலமாயிற்று. எலியை விழுங்கிய பாம்பினால் ஓடமுடியவில்லை. நகர்வதும் சிரமமாக விருந்தது. தரையில் அது புரண்டு கொண்டிருந்தது! ஓடி வந்தது ஓர் கீரி! பாய்ந்தது பாம்பின் மீது! போர் மூண்டது! கீரி பாம்பைத் துண்டு துண்டாகக் கத்தரித்துவிட்டது!

இந்தக் காட்சியைக் கண்டதும், தூய மணி நினைவில் ஆழ்ந்து விட்டான்! கிழவன் சிரித்தான்!

"மணி"

சிந்தனை கலைந்தது, தூயமணி திரும்பி கிழவனைப் பார்த்தான்.

"தம்பி, பார்த்தாயா இதனை?"

"பார்க்கச் சகிக்க வில்லை! கோரம்!"

"பார்க்கச் சகிக்காது தான்! ஆனால் சிந்திக்கத் தூண்டும்! மணி, காட்டில் நடைபெறும் இந்தக் கோரக் காட்சியே நாட்டிலும் நடைபெற்று வருகிறது! ......மக்கட் கூட்டம்—எலி! வேந்தன், பாம்பு!......'

"உண்மைதான், நீங்கள்--கீரி! பாம்பின்மீது பாய சமயம் எதிர் பார்த்திருக்கிறீர்! நான் பெருத்த துரோகம் செய்கிறேன்—உங்களோடு சேர்ந்திருப்பதன் மூலம்!"

"இதென்னப்பா இப்படிக் கோபித்துக்கொள்கிறாய்? விஷயமென்ன, விளக்கமாகத்தான் சொல்லேன்!"

"தண்டனை தந்தீர், ஆனால் அவன் தங்கள் முடியைப் பறிக்க முயற்சி செய்கிறான் என்று பிரேமா மன்னனிடம் சொன்னாள் அல்லவா?......"

"ஆமாம், சொன்னாள்! தங்களை அரசன் கண்டு பிடித்துத் தூக்கிலிட வேண்டுமென்றும் ஆரியப் பெண் அரசனைக் கேட்டுக் கொண்டாள்—நன்றாக நினைவிருக்கிறது! அதனையா மறப்பேன், அதற்கென்ன இப்பொழுது?"

"இது உண்மைதானா என்பது மட்டும் எனக்குத் தெரிந்தால் போதும்!',

"தெரிந்தால்?"

"அடுத்த நொடியிலிருந்து எப்படி நடந்து கொள்வதென்று முடிவுசெய்யப் போகிறேன்!"

"வீரா உன் போக்கே தனியாக இருக்கிறதே! மருதனைத் தூக்கிலிட வேண்டுமென்று பிரேமா சொன்னபோது, துடித்தாய், கோபப்பட்டாய்! மருதன் நான் தான் என்று தெரிந்ததும் ஆச்சரியப்பட்டாய்! அதன் பிறகு பேசாமலே நடந்து வந்தாய்! இப்பொழுது என்னடா வென்றால் சீறி விழுகிறாய்!........"

"எவரது அன்பையும் ஆதரவையும் பெற்று உடல் வளர்த்தேனோ, அவரையே கவிழ்த்து, மணிமுடியைப் பறிக்கத் திட்டமிட்டு வேலைசெய்யும் தங்களிடம் இனி சீறிவிழாமல் சிரித்துக் கொண்டா பேசுவேன்? துரோகம், பெரியவரே, இது பெருத்த துரோகம்!'

"மன்னனைப்போல மயக்கமுற்று அவள் கூறியதை நீயுமா நம்புகிறாய்?"

"நம்புகிறேன், உண்மையாக நம்புகிறேன்! நீங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்தவன் நான், ஆகவேதான் நம்புகிறேன்!"

"மன்னனின் முடியைப் பறிக்கவா ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்?"

"ஆமாம்!"

"என்னப்பா அப்படி நான் செய்திருக்கிறேன்?"

"என்ன செய்திருக்கிறீரா? எல்லாம்தான் செய்து வைத்துக்கொண்டிருக்கிறீர்! குகை

Best copy available.

யில்லம் எதற்காக அமைத்தி ருக்கிறீர்? கண்கட்டி அதற்குள் கொண்டுசெல்வதும், கண்கட்டி வெளியே கொண்டுவந்து விடுவ தும் எதற்கு? அற்புதங்கள் நிறைந்த அந்த இடம் காட்டின் மத்தியிலிருக்கக் காரண மென்ன? அவ்வளவு பெரிய முத்துக் குவியலைச் சேகரித்து வைத்துள்ளீரே, அது எதற்கு? ஏதேதோ பேசி என் மனதைக் குழப்பி தங்களுடனேயே தங்கி யிருக்கும்படி செய்துவிட்டீரே, அது ஏன்?"

"ஆத்திரப்படாதே, தம்பி! எல்லாக் கேள்விகளுக்கும் என் வாழ்க்கை வரலாறுதான் பதில்!"

"வரலாறு! நீங்கள் காட்டும் பல ஆசைகளில் இதுவும் ஒன்று! சொல்லமாட்டீர்கள், சொல்கிறேன், சொல்கிறேன் என்று தினம் தினம் சொல்லிக் கொண்டே நாட்களை ஓட்டி, காரியத்தைச் சாதித்துக்கொள் வீர்! இதுதானே உண்மை? காட்டிற்கு வெளியே கொண்டு போய் விட்டுவிடுங்கள், பிறகு வழி தெரியும்-சேர நாட்டிற்குச் சென்றுவிடுகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே தூயமணி எழுந்தான்! எழுந்தவனின் கையைப் பிடித்திழுத்து உட் காரவைத்தான் கிழவன்.

"என்னை இனி தடுப்பதில் பயனில்லை?"

"நான் யார் உன்னைத் தடுக்க? போவதற்கு முன் என் வரலாற் றைக் கேட்டுவிட்டுப் போ!"

தூய மணியின் உள்ளம் குழம்பியது! வரலாற்றை, அறி வதற்கு முன்னர் செல்லவும் அவன் மனம் இடந் தரவில்லை! மன்னனின் ஆட்சியைக் கைப் பற்றத் திட்டமிட்டிருப்பனோடு சேர்ந்து இருந்துகொண்டு வேந் தனுக்குத் துரோகம் செய்யவும் அவன் உள்ளம் ஒப்பவில்லை!

"இப்பொழுது சொல்வதா னால் கேட்பேன், இல்லையெனில் தலைநகரம் திரும்பாமல் இங்கு நான் தங்கப்போவதில்லை!"

"சொல்கிறேன், இப்பொ ழுதே சொல்கிறேன்! கேட்டு விட்டு உன் மனம் இசைந்தால் பிறகு போ!"

"சரி, அப்படியே செய்கி றேன்!"

கிழவன் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டு தன் வர லாற்றைக் கூற ஆரம்பித்தான்! இதோ கிழவன் பேசுகிறான்!

தம்பி, கவனமாக நான் சொல்வதைக் கேட்டுக்கொண் டுவா! என் வரலாற்றில் சுவை மிகுந்த பல நிகழ்ச்சிகள் இருக் கின்றன! வாழ்வின் மூன்றாவது பகுதியில் நான் இப்பொழுது இருக்கிறேன்! நான்காவது பகு திதான் என் வாழ்க்கை இலட் சியத்தின் எல்லை என்று நான் எண்ணிக்கொண் டிருக்கிறேன்! நான்காவது பகுதிக்கு நான் செல்வேனோ மாட்டேனோ, அது எனக்குத் தெரியாது! நீ அந்தப் பகுதியில் வாழவேண் டும், என்றென்றும் வாழவேண்டு மென்பதே என் ஆசை.........

சேர மன்னன் சேதன னின் தந்தையும் என் தந்தை யும் நெருங்கிய தோழர்களாகப் பழகி வந்தார்கள். அரச சபை யில் இசைப் புலவர் என் தந்தை! காலத்தின் வேகத்தில் கருத்து வேற்றுமை உண்டா யிற்று என் தந்தைக்கும் அரச ருக்கும்! என் தந்தையை நாடு கடத்தும் அளவிற்கு வேற் றுமை வளர்ந்தது!

நாடுகடத்தப்பட்ட என் தந் தையைப் பாண்டியன் ஏற்றுக் கொண்டான். அவரது அருமை பெருமை புலமைகளைத்தெரிந்து பாராட்டினான்! அரசசபையில் இசைப்புலவர் பதவியை என் தந்தைக்கு பாண்டிய மன்னர் தந்தார்!

அரண்மனைக்குப் பக்கத்தில் அழகிய வீடொன்றில் நாங்கள் வசித்து வந்தோம்: அப்பா வுடன் அடிக்கடி அரண்மனைக்கு நான் செல்வது வழக்கம்! எனக் கும் பழக்கமுண்டு இசையில்! என்னையும் பாடும்படிக் கூறு வார் அரசர்! பாடினேன், கேட் டவர் அனைவரும் ரசித்து இன் புற்றதை அறிந்தேன்!

நான் வளர்ந்து கொண்டே வந்தேன்! என் வாழ்க்கையில் ஓர் பெரும் இடிவிழுந்தது! என் தந்தை இறந்தார்! அரசர் எனக் குத் தேறுதல் கூறினர்! என் அப்பாவிற்குப் பிறகு இசைப் புலவர் பதவியை மன்னர் எனக் குத் தந்தார்!

ஒரு நாள் நான் அரண்மனை யில் பூஞ்சோலையிலிருந்த ஒரு மேடையின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தேன்!

"சேர நாட்டிற்குச் செல்ல வேண்டும், அதன் மலைவளத்தை யும் நிலவளத்தையும் கண்டு மகிழவேண்டும்! என் இசையின் திறத்தை சேரர்களும் அறிய வேண்டும்! என்னை அவர்கள் புகழவேண்டும்! அதனைக் கேட்டு நான் மகிழவேண்டும். எட்டுத் திக்கும் என் புகழ் பரவவேண் டும்! என் தந்தையை நாடு கடத் திய மன்னன் மாண்டு விட் டான், அவன் மகனாகிலும் என் தந்தைக்குப் பதில் என்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்! சேரநாடுதானே உம்நாடு, தயை கூர்ந்து இங்கேயே வந்து விடுங் கள் என்று சேரமன்னன் சேத னன் என்னைக் கெஞ்ச வேண் டும்! பிறகு நான் சேரநாடு வந்து நிரந்தரமாகத் தங்கவேண்டும்.... ......"இப்படி ஏதேதோ என்

(7-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
...Merchant St., Madras. Joint Editor: M. Ilancheliyan B. A. (Hons)

# END OF ISSUE